மருத்துவமனைகளில், மருத்துவர்கள் இல்லாத நிலையை போக்கிட, 191 மருத்துவர்கள் இந்த வாரம் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பட்டுக்கோட்டையிலும் மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 373, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

373—

மின் மாற்றி

***59808—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, புளியமங்கலம் ஊராட்சி, புளியமங்கலம் கிராமத்தில் கூடுதல் மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், புளியமங்கலம் ஊராட்சி, புளியமங்கலம் கிராமத்தில் நான்கு 100 கே.வி.ஏ. திறன்கொண்ட புளியமங்கலம் எஸ்.எஸ். 1, 2, 3 மற்றும் 4 ஆகிய மின் மாற்றிகளின் வழியாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில்கொண்டு, புளியமங்கலம் கிராமத்திற்குக் கூடுதலாக 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றி ஒன்றினை அமைத்திட 2.8 இலட்சம் ரூபாயில், மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அப்பணிகள் இன்னும் ஒரு

மாதக் காலத்திற்குள் முடிவடையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் மின் வெட்டு மாநிலமாக இருந்த தமிழகத்தை, மின் மிகு மாநிலமாக்குவேன் என்ற வாக்குறுதியைத் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மின் வெட்டே இல்லாத மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கி, தமிழ்நாடு மின்சாரத் துறையை தலை நிமிரச் செய்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

நானூறு ஆண்டுகளானாலும் செய்ய முடியாததை, இந்த நான்கே ஆண்டுகளில் செய்து காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அரக்கோணம் நகருக்குத் தனியாக 8 கோடி ரூபாயில் ஒரு துணை மின் நிலையம், இச்சிப்புத்தூரில் 12 கோடி ரூபாயில் ஒரு புதிய துணை மின் நிலையம், நெமிலி புன்னையில் 33 கே.வி.ஏ.-வில் உள்ள துணை மின் நிலையத்தை 14 கோடி ரூபாயில் 110 கே.வி.ஏ.-யாகத் தரம் உயர்த்தி, இதுவரை இல்லாத அளவில் மின் துறைக்கு மட்டும் 34 கோடி ரூபாயை அரக்கோணம் தொகுதி மக்களுக்கு வாரி வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அரக்கோணம் தொகுதி மக்களின் சார்பில் கோடானுகோடி நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட புளியமங்கலம் கிராமத்திற்கு கூடுதலாக ஒரு 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியை அமைத்துத் தருவதாக நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அந்தப் பகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட மோசூரில் உள்ள 110 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு மின்சாரம் செல்கிறது. மின்சாரம் செல்கின்ற அந்த மின் பாதை 20 கிலோ மீட்டர் தூரம் உள்ளதால்,

மழைக் காலங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு மின் தடை ஏற்படுகிறது. அதனால், எனது தொகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, திருவாலங்காடு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைத்து, எனது தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வேலூர் மாவட்டத்திலே, 12—வது ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில், 15 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டு, அதில் 9 துணை மின் நிலையங்களுக்கான பணிகள் முடிக்கப்பட்டு, இப்போது பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதம் இருக்கின்ற ஆறு துணை மின் நிலையங்களிலும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இவை தவிர, வேலூர் மாவட்டத்திலே எந்தெந்த இடங்களிலே, புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமோ அந்த இடங்கள் எல்லாம் கண்டறியப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இவைதவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதியதாக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற அந்தப் பகுதியிலே உரிய ஆய்வுகள் மேற்கொண்டு அங்கே இருக்கின்ற மின் பளுவையும் கணக்கில்கொண்டு தேவை ஏற்படின் அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 374, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*